வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# இலக்கிய உலகில் பா.வளன் அரசு

மு.பிரபாகரன்
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழாய்வுத் துறை)
தூய வளனார் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 02

**ஆய்வுச் சுருக்கம்**

மொழிக்கு வரலாறு முக்கியமானதாகும். சமுதாயத்தின் வழி மொழியும் மொழியினம் வழி சமுதாயமும் வளர்ந்து வருகின்றன. இராண்டாயிம் ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்து நிற்கும் தமிழ்மொழியானது ஓர் இனத்தையோ மதத்தையோ சார்ந்து வளர்ந்தவை அல்ல ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வேவ்வேரு மதத்தினரால் மொழி வளர்க்கபட்டது. களப்பிரர் காலத்தில் பௌத்த சமணர்களாலும் பல்லவர் காலத்தில் சைவ வைணவர்களாலும் வளர்க்கபட்டது. மாலிக்கபூரின் படையெடுப்புக்குப் பின்பு இஸ்லாமியர்களாலும் ஐரோப்பியர் வருகியால் கிறித்துவர்களாலும் மொழிவளர்த்தெடுக்கப்பட்டது.

## முன்னுரை

தமிழ் மொழி தொன்றுத்தொட்டு வற்றாத இலக்கிய ஊற்றாக வளர்ந்து கொண்;டே இருக்கின்றது. கால மாற்றத்திற்கு ஏற்ப பல இலக்கியங்கள் உருபெற்று மொழியை வாழ்வாங்குவாழ வைக்கின்றது. 16 ஆம் நூற்றாண்டுவாக்கில் இந்தியாவிற்கு வணிகரீதியாகவந்த ஐரோப்பிய நாட்டவர் பின்னர் தங்கள் மதத்தைப் பரப்பத்

தொடங்கினர். மதத்தைப் பரப்ப மொழியைக் கற்றவர்கள் மொழியின் இனிமையில் கரைந்து பல இலக்கியங்கள் படைத்தனர். கிறித்துவ மதத்தை தழுவிய தமிழர்களும் இலக்கியங்கள் படைதது வருகின்றனர். அவர்களில் தற்காலத்தில் பா.வளன் அரசு சிறந்த எழுத்தளராக விளங்குகின்றர்.

**ஆசிரியர் பற்றி.............**

பா.வளன் அரசு அவர்கள் 12.05.1940 இல் பாளையங்கோட்டையில் பால்பூபாலராயர் - மரியம்மாள் அவர்களின் மகனாகப் பிறந்தவர். பாளையங்கோட்டைத் தூய சவேரியார் கல்லூரியிலும் காரைக்குடி அழகப்பர் கல்லூரியிலும் பயின்று முதுகலைப்பட்டம் பெற்றவர். மதுரை காமராசர் பல்கலைகழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுவர் பட்டம் பெற்றவர். பயிலும் பொழுதே தூய சவேரியார் கல்லூரி வீரமாமுனிவர் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவும் அழகப்பர் கல்லூரியின் மாணவரர் தலைவராகவும் விளங்கியவர். இவருடைய மனைவி ம.செயராணி இவர்களுக்கு ஏழு குழந்தைகள் உள்ளனர்.

தமிழ்க்குருகுலத்தில் பண்பட்ட முனைவர் பா.வளன் அரசு ஐயாவின்

தமிழ்ப்பணிக்கு நாமும் நாடும் துணைநிற்க வேண்டும்

என மூதறிஞர் வ.சு.ப.மணிக்கனாரின் பாராட்டுதலைப் பெற்ற வண்டமிழ்த் தொண்டர் இவர்.

பணியாற்றிய அமைப்புகள்

பேராசிரியர் பா.வளன் அரசு அவர்கள் தனித்தமிழ் இலக்கியக்கழகம், மாநிலத் தமிழ்ச் சங்கம், உலகத் தமிழ்க்கழகம், குறளாயம், உலகத் திருக்குறள் மையம், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டு மையம், குறள் அரசுக் கழகம், திருவருட்பேரவை, கம்பன் கழகம், என்னும் பல்வேறு அமைப்புகளில் பணிபுரிந்துள்ளார். பேராசிரியர் பா.வளன் அரசு அவர்கள் திருநெல்வேலித் திருமண்டில ஆசிரியர் வீட்டமைப்புச் சங்கம் வயிலாக மீட்பர் நகர் உருவாக்கிய பெருமைக்கு உரியவர். மாவட்ட ஆட்சியர் கி.தனவேல் இ.ஆ.ப அவர்களிடம் 55 செண்டு நிலம் பெற்றுத் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டு மையம் நிறுவியவர் மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் உருவாகிடத் தேவையான அடிப்படைப் பணிகளின் ஒருங்கிணைப்பாளராக அவரைக் குறிப்பிடலாம்.

தனித்தமிழ் இலக்கியக் கழகம் வாயிலாக இருநூற்று ஐம்பது புலவர் பெருமக்களையும் ஐம்பது ஆய்;வறிஞர்களையும் ஆயிரக்கணக்கான மாணவப் பேச்சாளர்களையும் உருவாக்கிய பெருமைக்கு உரியவர். மாநிலத் தமிழ்ச்சங்கம் வாயிலாக முத்தமிழ் விழா, ஐந்தமிழ் விழா, எழுதமிழ் விழா, பன்முகத்தமிழ் விழாக்களை நடத்தியுள்ளார். மாதந்;தோறும் மாநிலத் தமிழ்ச் சங்கத்தில் இருபது சொற்பொழிவகளைத் தொடர்ந்து நிகழ்த்தியுள்ளார் ஊரகத் திருக்குறள் மையம் வாயிலாகப் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மணிகளைத் திருக்குறள் பயில வைத்தும் எழுபத்திரண்டு அறிஞர் பெருமக்களைப் பாரட்டியும் சான்றிதழ் வழங்கிய பெருமைக்குஉரியவர். உலகத் திருக்குறள் பேரவையின் சார்பில் மதுரை மாநகரில் திருக்குறள் ஆய்வரங்கம் ஏற்பாடு செய்து திருக்குறள் நூல்கள் பல தந்துள்ளால். பேராசிரியர் வி.மரிய அந்தோனி எழுதிய விவிலிய வாழ்வியல் காப்பியமான அருளவதாரம் வெளிவரவும் ஒளிதரவும் உறுதுணைபுரிந்துள்ளார். குறள் அரசுக் கழகம் உருவாக்கித் தமிழகத்தின் முப்பத்திரண்டு மாவட்டங்களிலும் பொறுப்பாளரை

உருவாக்கித் திருக்குறளை வாழ்வியல் ஆக்கிட ஊக்கத்துடன் அயராது செயல்பட்டு வருகின்றார். அந்தமான் இலங்கை மலேசியா சிங்கப்பூர் இசுரேல் உருரோமாபுரி ஆகிய பல இடங்களுக்கும் பறந்து சென்று பைந்தமிழ்ப்பணி புரிந்துள்ளார்.

**ஆசிரியப்பணி**

ஆசிரியப்பணியே அறப்பணி என்பதற்கு இணங்க வாழ்ந்துகாட்டியவர் ஐயா வளன் அரசு அவர்கள். மாணவர்களிடம் அன்பாகப் பழகும் இயல்புடையவர் அவர்களின் வளர்வச்சியே தம்முடைய வெற்றியாகக் கருதி உழைப்பவர். பல கல்லூரிகளில் பணியாற்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காப் பாடுபட்வர். சிறந்த பேச்சளராகவும் எழுத்தாளராகவும் விளங்குகின்றார்.

1) தி;ருச்சிராப்பள்ளி தூய வளனார் கல்லூரியி;ல் தமிழ் விரியுரையாளர் (1960-61)

2) பாளையங்கோட்டை தூய சேவியர் கல்லூரியில் தமிழ் விரியுரையாளர் (1963-67)

3) பாளையங்கோட்டை தூய யோவன் கல்லூரியில் தமிழ் போராசிரியர் (1967-97)

4) பாளையங்கோட்டை சதக்கத்துல்லா அப்பா கல்லூயில் தமிழ் போரசிரியர்(2001-10)

**எழுதிய நூல்கள்**

திருக்குறளின் மீது தனியாதப் பற்றுக் கொண்டவர். குறளை மையமாகக் கொண்டு நூல்கள் பல எழுதியுள்ளார் பாரதி, வீரமாமுனிவர், திரு.வி.க முதலிய பலரைப் பற்றியும் ஆய்வுநூல்கள் எழுதியுள்ளார். பத்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதி தமிழ் உலகிற்குப் பெருமைச் சேர்த்தவர் ஐயா அவர்கள்.

1) கட்டுரைக் களஞ்சியம் (1972)

2) நாடும் ஏடும் (1974)

3) வீரமாமுனிவர் ஒரு விளக்கம் (1980)

4) பாரிதியின் புலமை நலம் (1982)

5) துறைதோறும் திரு.வி.க (1983)

6) தேம்பாவணித் திறன் (1988)

7) விவிலியக் கருத்தரங்கம் (1993)

8) தமிழ் நெஞ்சங்கள் (1994)

9) தமிழகப் புலவர்குழு அணியும் பணியும் (1995)

10) வாழ்க்கை விடியல் திருக்குறள் (2000)

11) வழிகாட்டும் வள்ளுவம் (2003)

12) திருக்குறள் விளக்கம் (2005)

13) திருக்குறள் ஆய்வுக் களஞ்சியம் (2005)

14) பன்முகத் தமிழ் (2006)

15) வண்டமிழ்த்தொண்டர் பெருமக்கள் (2006)

16) கிறித்தவத் தமிழ்ச் சான்றோர் (2009)

**பெற்றவிருதுகள்**

சாதனையாளர்களைப் பெருமைப்படுத்துவது நமது பண்பாடு எண்ணற்ற நூல்களை எழுதிய முனைவர் பா.வளன் அரசு ஐயா அவர்களைத் தமிழக அரசும் தனியர் நிறுவனங்களும் விருதுகளைக் கொடுத்துச் சிறப்பித்துள்ளது.

1) திருவள்ளுவர் விருது - தமிழக அரசு (2011)

2) அருண்மொழிச்செல்வர் - தமிழ்நாட்டு நல்வழி நிலையம் (1974)

3) திருக்குறள்நெறித் தென்றல் - தமிழக அரசு (1985)

4) தமிழ்மாமணி – உலகத் தமிழ்க் கிறித்துவப் பேரவை (1986)

5) திருக்குறள் சான்றோர் - பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் (2001)

6) மூத்த தமிழ் அறிஞர் - மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் (2010)

இது போன்ற நாற்பத்தைந்திற்கும் அதிகமான விருதுகள் பெற்றுள்ளார்.

**சாதனைகள்**

1) புலவர்கள் இருநூற்று ஐம்பதின்மரை உருவாக்கியவர்

2) இளமுனைவர் இருபதின்மரை வழிநடத்தியவர்

3) முனைவர் பட்டப்பேற்றுக்குப் பதின்மரின் நெறியாளர்

5) பதினாறு நூல்களின் ஆசிரியர்

6) நாற்பது ஆண்டுகளாகத் திருநெல்வேலித் தனித்தமிழ் இலக்கியக் கழகத்தின் சார்பில் கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப்போட்டி கட்டுரைப்போட்டி அகியன நடத்தி வருபவர்.

7) பாளையங்கோட்டை மாநிலத்தமிழ்ச்சங்கத்தின் இணைச்செயலாளராகக் கடந்த பத்து ஆண்டுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலக்கியக் கூட்டங்கள் நடத்தியவர்.

8) உலகத்திருக்குறள் மையத்தின் தென்மண்டிலப் பொறுப்பாளராகப் பணியாற்றி ஆயிரக்கணக்கான மாணவர்களைத் திருக்குறள் செல்வர் பட்டம் பெற வைத்தவர்.

9) திருநெல்வேலியில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டு மையம் உருவாக அயராது பாடுபட்டவர்களுள் முதன்மையானவர்;

இது போன்ற எண்ணற்ற சாதனைகளுக்குச் சொந்தக்காரர்

**திருக்குறள் போற்றி மாலை**

நான்காம் தமிழ்ச்சங்கம் 1901 இல் பாண்டித்துரைத் தேவாரல் தோற்றிவிக்கப்பட்டது. தமிழ்மொழியின் பெருமைகளை நானிலம் எங்கும் பரப்பும்

விதமாகக் செந்தமிழ் இதழை (07.12.1902) இல் சங்கத்தின் மூலமாக வெளிவரத்தொடங்கியது. இவ்விதழில் ரா.ராகவையங்கார் மு.ராகவைங்கார் பின்னத்தூர் அ.நாரயணசாமி முதலிய தலைச்சிறந்த அறிஞர்கள் கட்டுரைகள் எழுதி மொழியின் வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். அந்த வரிசையில் பா.வளன் அரசும் திருக்குறள் போறி மாலை என்னும் தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். 133 அதிகாரங்களைக் கொண்ட திருக்குறளை ஒவ்வொரு அதிகாரத்தின் உட்பொருளை வெளிப்படுத்தும் விதமாக ஒரு வரியில் விளக்கம் எழுதியுள்ளார். 133 வரிகளை கொண்டவையாக அவை அமைந்துள்ளது.

| திருக்குறள் | | திருக்குறள் போற்றி மாலை |
|---|---|---|
| 1) கடவுள் வாழ்த்து | - | அகரமாய் அமையும் இறையே போற்றி |
| 2) வான் சிறப்பு | - | ஆற்றலின் ஊற்றாம் மழையே போற்றி |
| 3) நீத்தார் பெருமை | - | நிறைமொழி மாந்தர் நிலையே போற்றி |
| 4) அறன் வலியுறுத்தல் | - | மனத்திலும் மாசிலா மாண்பே போற்றி |
| 5) இல்வாழ்க்கை | - | இயல்பாய் வாழும் ஏந்தலே போற்றி |
| 6) வாழ்க்கைத் துணைநலம் | - | பேணிக் காக்கும் பெண்மையே போற்றி |
| 7) மக்கட் பேறு | - | அறிவார்ந்த மக்களின் மகிழ்வே போற்றி |
| 8) அன்புடைமை | - | அன்பின் வாயிலாம் பண்பே போற்றி |
| 9) விருந்து ஓம்பல் | - | விருந்து புரத்திடும் வள்ளலே போற்றி |
| 10) இனியவை கூறல் | - | இனியவை பேசும் கனிவே போற்றி |
| 11) செய்ந்நன்றி அறிதல் | - | செய்ந்நன்றி பாராட்டும் செம்மலே போற்றி |
| 12) நடுவு நிலைமை | - | நெஞ்த்துக் கோடா நேர்மையே போற்றி |
| 13) அடக்கம் உடைமை | - | சீமை பயக்கும் அடக்கமே போற்றி |

14) ஒழுக்கம் உடைமை - ஒழுக்கத்தின் வழுவா விழுப்பமே போற்றி

15) பிறன் இல் விழையாமை - பின்மனை நயவாப் போராண்மையே போற்றி

**முடிவுரை**

தமிழ் இலக்கியத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அளவு கிறித்துவர்களின் பங்களிப்பு உண்டு. சிறுகதை, நாவல,; உரைநடை முதலிய இலக்கிய வகைகளை அறிமுகம் செய்து மொழியை வளமாக்கினர். மொழியானது கால மாற்றத்திற்கு ஏற்ப புதுமைகளை ஏற்றுக் கொள்வதன் விளைவாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நிலைத்துநின்று வளர்ந்து வருகின்றது. எழுத்தாளர்கள் பா.வளன் அரசு போன்றோர் நம் மொழிக்கு மேலும் வலுசேர்க்கின்றனர்.

**துணைநூற் பட்டியல்**


1) மு.அருணாசலம் - தமிழ் இலக்கிய வரலாறு

நியூ செஞ்சுரி புக்;;;;;;; ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை – 600 050.

2) செந்தமிழ் இதழ் - மதுரை தமிழ்ச்சங்கம்

மதுரை

3) http://muelangovan.blogspot.com/